# தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

வரைவு யாப்பு

1. பெயர் :
   தமிழ் மக்கள் தேசிய கூட்டணி. இது இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கட்சியாகும்.

2. நோக்கம்:

   2.1 இலங்கை தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அவர்களது தாயகமான இணைந்த வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் அவர்களுக்குரித்தான இறையாண்மையின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு முறையிலான ஒரு சுயாட்சி அலகை நிறுவுதல்.

   2.2 சுயாட்சி அலகானது மற்றொரு பிராந்தியத்தின் மீது மேலாதிக்கம் செலுத்தாத கைகோர்த்துச் செயற்படும் அமைப்பாக அமையும்.

   2.3 சுயாட்சி அலகுக்குள் வாழும் அனைத்து மக்களுக்கும் இன, மத, மொழி, கலாசார மற்றும் பண்பாட்டு ரீதியான அனைத்து அங்கீகாரங்களும் கிடைப்பதற்காகப் பாடுபடும்.

   2.4 சுயாட்சி அலகில் வர்க்கபேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காகப் பாடுபடும்.

   2.5 இலங்கைத்தீவில் வாழும் அனைத்து தமிழ்பேசும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய, மொழி, கலாசார உரிமைகளையும் விழுமியங்களையும் பாதுகாப்பதற்காக உழைக்கும்.

3. அடிப்படை விதிகள்:

   a. தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கொள்கைகள், விதிமுறைகளுக்கிணங்க புதிய உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

   b. இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் உறுப்பினராகச் சேர்வதற்கு உரிமையுடையவராவர்.

   c. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சந்தா செலுத்த வேண்டும். ஆண்டுச் சந்தாவாக ரூ.100 செலுத்தப்பட வேண்டும்

## 4. உறுப்புரிமை

4.1. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நோக்கங்களையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்கின்ற பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் உறுப்பினர்களாக இணைந்துகொள்ளலாம்.

4.2 புதிய உறுப்பினர்கள் யாவரும் பிரதேச, மாவட்ட, பிராந்திய, மாகாண, செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலேயே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

4.3. புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற உறுப்பினர்களின் தகுதிகாண் காலம் ஒருவருடமாகும். இந்த ஓராண்டுகாலத்தில் கட்சியினால் வழங்கப்படும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அதற்கான அறிக்கைகளை பொறுப்பானவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். ஓராண்டின் பின்னர், பிரதேச பொறுப்பாளரினால் பரிந்துரைக்கப்பட்டு, மத்தியகுழுவினாலேயே நிரந்தர உறுப்புரிமை தீர்மானிக்கப்படும்.

4.4. அடிப்படை விதிகள் 3.3இல் கூறப்பட்டுள்ள சந்தாவினை உறுப்பினர்கள் யாவரும் உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

## 5. கட்சியின் கட்டமைப்பு

5.1. கட்சியின் உறுப்பினர்கள்

5.2. பிரதேசக் கிளைகள்

5.3. மாவட்டக் கிளைகள்

5.4 மத்தியகுழு

5.5 அரசியற்பீடம்

5.6 செயற்குழு

5.7 பொதுக்குழு

5.8 முன்னணி அமைப்புகள்

5.8.1 மாணவர் முன்னணி

5.8.2 இளைஞர் முன்னணி

5.8.3 மகளிர் முன்னணி

5.8.4 தொழிற்சங்கங்கள்

## 6. கட்சியின் இயங்குமுறை

6.1. கிராமங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படும் உறுப்பினர்களை இணைத்து பிரதேசக் கிளைகளை நிறுவுதல் வேண்டும்.

6.2. ஒவ்வொரு கிளையும் ஒரு தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் என ஐந்து நிர்வாகிகள், ஆறு செயற்குழு உறுப்பினர்கள் எனப் பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

6.3 ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கிளைகள் நிறுவப்பட வேண்டும். பிரதேச கிளைகளின் தலைவர், செயலாளர் உட்பட ஒவ்வொரு பிரதேசக் கிளையிலிருந்தும் ஐந்து உறுப்பினர்கள் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்களாக இருப்பர். உறுப்பினர் தொகை இரட்டை எண்ணில் அமையுமாயின் மாவட்ட தலைவர் மேலதிக வாக்குரிமையுடையவராவர்.

6.4 பிரதேசக்கிளை, மாவட்டக்கிளை என்பன மத்தியகுழுவின் தீர்மானங்களையும், வழங்கப்படும் வேலைத்திட்டங்களையும் நிறைவேற்றும் பொறுப்புடையனவாகும்.

6.5 கட்சியின் காங்கிரசில் மத்தியகுழு தெரிவுசெய்யப்படும். மத்தியகுழுவால் தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர் ஆகியோர் அடங்கிய செயற்குழு தெரிவுசெய்யப்படும். அரசியல் பீடத்தையும் மத்தியகுழுவே தெரிவு செய்யும்.

6.6 பிரதேச செயற்குழு, மாவட்டச் செயற்குழு ஆகியன மாதம் ஒருமுறை கூடவேண்டும். தேவையேற்படின் மேலதிகமாக கூட்டப்படலாம்.

6.7 ஆண்டுக்கு ஒருமுறை கட்சிமாநாடு நடத்தப்பட வேண்டும். கட்சியின் பொதுச்சபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும்.

6.8 கட்சியினால் மேற்கொள்ளப்படும் ஓராண்டு வேலைத்திட்டங்கள் அனைத்தும் மற்றும் அடுத்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் மற்றும் ஆலோசனைகள் யாவும் மாநாட்டில் ஆய்வு செய்யப்படும்.

6.9 ஐந்தாண்டுகளுக்கு இடையிலான கட்சியின் வேலைத்திட்டங்கள் தொடர்பான, உறுப்பினர்கள் தொடர்பான, மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் தொடர்பான விமர்சனங்கள், சுயவிமர்சனங்கள் ஆகியனபற்றி விவாதிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் உரிய களமாகக் பொதுச்சபைக்கூட்டம் நடாத்தப்படும்.

6.10கட்சியின் முன்னணி அமைப்புகளின் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், முன்னணியால் தீர்மானிக்கப்பட்டு மத்தியகுழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

7. கட்சியின் பொதுச்சபை

7.1 கட்சியின் பொதுச்சபைக்கூட்டம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.

7.2 கட்சியின் பொதுச்சபைக்கூட்டத்திற்கு முன்னோடியாக கட்சிக்கிளைகளின் மாநாடு நடாத்தப்படும்.

7.3 பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றும் உறுப்பினர்களை கட்சிக்கிளைகள் மத்தியகுழுவிற்குப் பரிந்துரை செய்யும்.

7.4 பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவாகும்வரை மத்தியகுழுவால் தெரிவு செய்யப்படும் தற்காலிகத் தலைவர் பொதுச்சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

7.5 கட்சியின் கடந்தகால வேலைத்திட்டங்கள் தொடர்பான ஆரோக்கியமான விமர்சனங்கள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகள் யாவும் பொதுச்சபையில் விவாதிக்கப்படும்.

7.6 மத்தியகுழுவினைத் தெரிவு செய்வதும், மத்தியகுழு மற்றும் தலைவர் உட்பட செயற்குழுவை தெரிவு செய்வதும் பொதுச்சபையிலேயே இடம்பெறும்.

8. மத்தியகுழு

8.1 மத்தியகுழுவை பொதுச்சபை தெரிவு செய்யும்.

8.2 மத்தியகுழு 35 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

8.3 மத்தியகுழுவின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

8.4 அரசியல் பீடத்தை மத்தியகுழுவே தெரிவு செய்யும்.

8.5 அரசியல் பீடம் தீர்மானிக்கின்ற கட்சியின் மூலோபாயத்திற்கான தந்திரோபாயங்களை மத்தியகுழுவே நிறைவேற்றும்.

8.6 கட்சியின் கிளை அமைப்புக்கள் அனைத்தையும் மத்தியகுழுவே வழிநடத்தும்.

8.7 மத்தியகுழுவிற்குப் பொறுப்பாக தலைவர் செயற்படுவார்.

8.8 மத்தியகுழுவில் வெற்றிடமேற்படுமிடத்து, சம்பந்தப்பட்ட மாவட்டக்குழுவின் ஆலோசனையுடன் தலைவர், அரசியல் பீடத்துடன் இணைந்து அந்த வெற்றிடத்தை நிரப்புவார்.

8.9 மத்தியகுழுவினால் பரிந்துரைக்கப்படுகின்ற கட்சியின் வேலைத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற துணைக்குழுக்களாக நிதிக்குழு, அரசியல்

நடவடிக்கைக்குழு ஆகியவற்றை தலைவரின் ஆலோசனையுடன் மத்தியகுழு தெரிவு செய்யும்.

8.10 மத்தியகுழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடும். தேவையேற்பட்டால் ஒருவார கால அவகாசத்தில் தலைவர் மத்தியகுழுவைக் கூட்டலாம் என்பதுடன் மத்தியகுழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எழுத்துமூலம் விண்ணப்பிக்குமிடத்து தலைவர் மத்தியகுழுவைக் கூட்டலாம்.

## 9. செயற்குழு

9.1 கட்சியின் நிர்வாக கட்டமைப்புகளை செயற்படுத்துவதே செயற்குழுவின் பிரதான கடமையாகும்.

9.2 கட்சியின் செயற்குழுவானது தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் ஆகிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

9.3 செயற்குழுவை மத்தியகுழுவே தெரிவு செய்து வழிநடத்தும்.

### 9.ய. தலைவர்

9.ய.1 அரசியல்பீடம், மத்தியகுழு, செயற்குழு மற்றும் கட்சியின் முன்னணி அமைப்புகள் அனைத்தையும் தலைவரே தலைமை தாங்கி வழிநடத்துவார்.

9.ய.2 தலைவரின் பதவி வெற்றிடம் ஏற்படுமிடத்து, அரசியல் பீடத்தின் ஆலோசனையுடன் மத்தியகுழு தற்காலிக தலைவரை தெரிவு செய்யும். தற்காலிக தலைவர் அடுத்த பொதுச்சபைக் கூட்டம் வரை கடமையாற்றுவார்.

9.ய.3 கட்சியின் மத்தியகுழு, செயற்குழு, அரசியற்பீடம் ஆகியவற்றின் கூட்டங்களை தலைவரே தலைமையேற்று நடாத்துவார்.

### 9.டி. உபதலைவர்

9.டி.1 கட்சியின் நடவடிக்கைகளில் தலைவருக்கு உதவியாக இருப்பார்.

9.டி.2 கூட்டங்களுக்கு தலைவர் சமூகமளிக்கமுடியாத சந்தர்ப்பங்களில் தலைவரின் கடமைகளை நிறைவேற்றுவார்.

## 9.உ. செயலாளர்

9.உ.1. கீழே தரப்பட்டுள்ள சங்கத்தின் ஏடுகளையும், ஆவணங்களையும் ஒழுங்காக வைத்திருத்தல் செயலாளரின் கடமையாகும்.

உறுப்பினர் பெயர் விபர அட்டவணை

பொதுக்கூட்டங்கள், மத்தியகுழுக் கூட்டங்கள், அரசியற்பீடக் கூட்டங்கள், செயற்குழு கூட்டங்கள் ஆகியவற்றின் நிகழ்ச்சிக் குறிப்புகள், அறிக்கைகள்.

மேற்குறித்த கூட்டங்கள் தொடர்பான வரவுப்பதிவேடு.

கடிதங்கள், கட்சியின் ஆவணங்கள் ஆகியவற்றின் பதிவேடு

கட்சியின் கடிதத் தலைப்பு புத்தகங்கள், கட்சியின் இலட்சினைகள்

கட்சியின் பதிவுச்சான்றிதழ்

9.உ.2. பொதுச்சபைக்கூட்டம், செயற்குழுக்கூட்டம், மத்தியகுழுக்கூட்டம், அரசியற்பீடக் கூட்டம் ஆகியவற்றுக்கான அறிவித்தல்களை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துததல்.

9.உ.3. பொதுச்சபைக்கூட்டம், செயற்குழுக்கூட்டம், மத்தியகுழுக்கூட்டம், அரசியற்பீடக் கூட்டம் ஆகியவற்றின் அறிக்கைகளை தயாரித்து அடுத்த கூட்டத்தில் வாசித்தல்.

9.உ.4. செயலாளர் பதவியில் இருந்து விலக நேரிடின் அதற்கான காரணத்தை தலைவரூடாக மத்தியகுழுவுக்கு எழுத்துமூலமாக தெரிவிக்க வேண்டும். செயலாளரின் பதவி விலகல் தொடர்பாக மத்தியகுழுவே தீர்மானிக்கும். செயலாளரின் பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து தன்வசமுள்ள கட்சியின் சகல ஆவணங்களையும் செயற்குழு முன்னிலையில் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். புதியசெயலாளர் தெரிவின் பின்னர் தலைவர் கட்சியின் ஆவணங்களை புதிய செயலாளரிடம் ஒப்படைப்பார்.

9.ன. உபசெயலாளர்

9.ன.1. செயலாளருக்கு அவரின் கட்சிக் கடமைகளுக்கு உதவிசெய்வது, செயலாளருடன் இணைந்து கட்சிக் கடமைகளை ஆற்றுவதும் உபசெயலாளரின் கடமைகளாகும்.

9.ந. பொருளாளர்

9.ந.1. கட்சியின் பணத்தை பாதுகாப்பாக வைத்திருப்பது. கட்சியின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பொறுப்பாக இருப்பது.

9.ந.2. வரவு செலவு ஏடுகள், வங்கிக் கணக்குப் புத்தகம், காசோலைகள் போன்றவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பது.

9.ந.3. ஒவ்வொருமுறையும் கூட்டப்படும் செயற்குழு கூட்டத்தில் இரு செயற்குழுக் கூட்டங்களுக்கிடையிலான வரவு செலவை சமர்ப்பித்தல்.

9.ந.4. வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான வரவு செலவு ஆண்டறிக்கையை தயாரித்து, கணக்காய்வாளரின் அங்கீகாரத்தைப் பெற்று சபையில் சமர்ப்பித்தல் ஆகியன பொருளாளரின் கடமைகளாகும்.

9.ந.5. நிதியினை கையாள்வதற்கு வங்கிக் கணக்கு ஒன்று நடைமுறையில் இருக்கும். இவ்வங்கிக் கணக்கு தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் இணைந்து திறக்கப்படும்.

9.ந.6. வங்கிக்கணக்கில் பணம் மீளப்பெறும்போது தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரில் இருவர் கையொப்பமிடுவர்.

9.ந.7. பொருளாளர் பதவியில் இருந்து விலக நேரிடின் அதற்கான காரணத்தை தலைவருடாக மத்தியகுழுவுக்கு எழுத்துமூலமாக தெரிவிக்க வேண்டும். பொருளாளரின் பதவி விலகல் தொடர்பாக மத்தியகுழுவே தீர்மானிக்கும். பொருளாளரின் பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து தன்வசமுள்ள கட்சியின் சகல ஆவணங்களையும், நிதிஅறிக்கையையும், தன்வசமுள்ள கட்சியின் நிதியையும் செயற்குழு முன்னிலையில் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். புதியபொருளாளர் தெரிவின் பின்னர் தலைவர் கட்சியின் ஆவணங்களை புதிய பொருளாளரிடம் ஒப்படைப்பார்.

10. அரசியல் பீடம்

10.1 அரசியல் பீடமே கட்சியின் அதியுயர் பீடமாகும். இதனை தலைவரே தலைமையேற்று வழிநடத்துவார்.

10.2 அரசியல் பீடத்தினை தலைவருடன் இணைந்து மத்தியகுழு தெரிவு செய்யும்.

10.3 கட்சியின் மூலோபாயத்தை நிறைவேற்றுகின்ற வகையில் காலத்திற்கேற்ற யதார்த்தபூர்வமான தந்திரோபாயங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் பீடம் மத்தியகுழுவிடம் கையளிக்கும்.

10.4 மத்தியகுழுவிலிருந்து தலைவர் உட்பட ஐவரும் மத்தியகுழுவால் தெரிவு செய்யப்படும் ஏனைய இருவருமாக இணைந்து ஏழு உறுப்பினர்கள் அரசியல் பீடத்தில் பணியாற்றுவார்கள்.

10.5 மத்தியகுழுவிற்கான ஆலோசனைகள் தேவைப்படுமிடத்து தலைவருடன் இணைந்து அரசியல் பீடமே அதனை மேற்கொள்ளும்.

10.6 அரசியல் பீடத்தில் நிலவும் வெற்றிடத்தை தலைவருடன் இணைந்து மத்தியகுழுவே நிரப்பும்.

11. நிதிக்குழு

11.1 கட்சியின் நிதி தொடர்பான அனைத்து வேலைத்திட்டங்களையும் தலைவருடன் இணைந்து மத்தியகுழுவின் ஆலோசனையுடன் நிதிக்குழு மேற்கொள்ளும்.

11.2 நிதிக்குழுவானது கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்துகின்ற சந்தா தொடர்பான வருடாந்த அறிக்கையை மத்தியகுழுவிற்கு கையளிக்கின்ற பொறுப்பினை உடையதாகும்.

11.3 கட்சியின் தேவைக்கான நிதி வளங்களை ஒழுங்கமைத்து. வருடாந்த வரவு-செலவு அறிக்கையை நிதிக்குழு மத்தியகுழுவிடம் கையளிக்கும்.

12. அரசியல் நடவடிக்கைக்குழு

12.1 அரசியல் நடவடிக்கைக்குழுவின் இணைப்பாளராக மத்தியகுழுவைச் சேர்ந்த ஒருவர் அங்கம் வகிப்பார். இவர், நாளாந்த அரசியல் நடவடிக்கை தொடர்பாக தலைவருக்கும், அரசியல் பீடத்திற்கும் இணைப்பாளராகச் செயற்படுவார்.

12.2 நாளாந்த அரசியல் நடவடிக்கைகளை அவானித்து, செய்திகளைச் சேகரித்து, கட்சிக்கு வழங்குதல் அரசியல் நடவடிக்கைக்குழுவின் தலையாய பணியாகும்.

12.2 கட்சியின் கட்டமைப்புகள் மற்றும் முன்னணி அமைப்புகளின் அரசியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணியினை அரசியல் நடவடிக்கைக்குழு செய்யும்.

12.3 கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் செய்திகளை வெளிக்கொணர்வதற்கான ஒருங்கிணைப்புக்குழுவாக அரசியல் நடவடிக்கைக்குழு பணியாற்றும்.

## 13. உறுப்புரிமை நீக்கம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை

13.1 கட்சியின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் நோக்கங்கள், கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படுமிடத்து அவரை உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கான அதிகாரத்தை மத்தியகுழு கொண்டுள்ளது.

13.2 பிரதேச, மாவட்ட, பிராந்திய கிளைகளின் நிர்வாகிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படுமிடத்து, அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமிடத்து, அவை தொடர்பான ஒரு விசாரணைக்குழுவை தலைவருடன் இணைந்து மத்தியகுழு நியமிக்கும். அவ்விசாரணைக்குழுவின் அறிக்கையைப் பின்பற்றி மத்தியகுழு இறுதி முடிவெடுக்கும்.

13.3 மத்தியகுழு உறுப்பினருக்கு எதிரான குற்றப்பத்திரிகையோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணையோ தாக்கல் செய்யப்படுமிடத்து, அரசியல் பீடத்தின் ஆலோசனையுடன், தலைவருடன் இணைந்து மத்தியகுழு ஒரு விசாரணைக்குழுவை நியமிக்கும். விசாரணை அறிக்கையின் அடிப்படையில் மத்தியகுழுவுடன் இணைந்து தலைவர் முடிவினை மேற்கொள்வார்.

13.4 தலைவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமிடத்து, நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, வருடாந்த மாநாட்டின்போது கட்சியின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மத்தியகுழு அரசியல் பீடத்தின் ஆலோசனையுடன் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

13.5 அரசியல் பீடத்திலுள்ள மத்தியகுழு உறுப்பினரல்லாத அரசியல்பீட உறுப்பினர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, கட்சியின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அரசியல் பீடம் தலைவருடன் இணைந்து விசாரணைக்குழு ஒன்றை ஏற்படுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.